## வரிவிளம்பரம்

### தேவை

சாவித்த சங்கோ, [illegible] சோள், Gum (கம்), Vicks போத்தல், பவுடர் டப்பா போல் பொலிண்டு பேனா, சவர்க்கிழங்குகள் மட்டும் காலை 9-00 மணிமுதல் 12-00 மணி வரை வாங்கப்படும் சங்கு சத்திரன், 55, மணிக் கூட்டு வீதி, கொழும்பு [illegible] யாழ்ப்பாணம். (B 2169)

### விலங்கியல் வகுப்பு?

G.C.E. (A/L 91 92மீள்வகுப்புகளுக்கான விலங்கியல் பாடம் அனுபவம் வாய்ந்த பட்டதாரி, கல்லூரி ஆசிரியரால், தனிப்பட்ட முறையில் கற்பித்துக் கொடுக்கப்படும். தொடர்பு:- 63, பொற்பதி வீதி, கொக்குவில் (R-1219)

### மணமக்கள் தேவையா

எம்மிடம் மணமக்கள் பலர் இருக்கிறார்கள். மங்கள ஏஜென்சி, சொல்பாத் கோட்டம், யாழ்ப்பாணம். (R-1313)

## இரத்த தானம்

(கொழும்புத்துறை)

யாழ் போதனா வைத்திய சாலை இரத்த வங்கிக்கு யாழ். சென்பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த 36 மாணவர்கள் அண்மையில் இரத்ததானம் செய்தனர் என வைத்திய சாலை உயர் அதிகாரி தெரிவித்துள்ளார். (24)

## இடமாற்றம்

(சங்கானை)

சங்கானை நகரில் அண்மையில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கை காரணமாக சங்கானை ப.நோ.கூ. சங்க விற்பனை நிலையம், கிராமிய வங்கி ஆகியன வழக்கம் பரை அம்மன் கோயிலுக்கு அருகாமையில் அமைந்துள்ள சங்கானை ப.நோ.கூ. சங்கத்தின் பண்ணாகம் கிளைக்கு அருகில் தற்காலிகமாக இயங்கி வருவதாக இதன் பொது முகாமையாளர் அறிவித்துள்ளார்.

## அறிவித்தல்

எங்கள் விற்பனைப் பொருளான V. S. P. ஸ்பெசல் நல்லெண்ணைக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் உறவுமுறை சொல்லி வேறுவிலாசம் உள்ள எண்ணெயை விற்பனை செய்கின்றார்கள். இவ்விஷயத்தில் வாடிக்கையாளர்களை கவனமாக இருக்கும்படி வேண்டிக் கொள்கிறோம்.

பரிமளா ஸ்ரோர்ஸ்

(R-1311) 26A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

## கணித விஞ்ஞான A/L 91 & 92

புதிய பகுதிகள் ஆரம்பம்

9 - 4 - 91 செவ்வாய் காலை 6.30

விபரங்களுக்கு: Personal

**New Science Centre**

Elilakam Front Lane - Jaffna.

'B/2335'

## விக்னா

### கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட்,

யாழ்ப்பாணம்.

## A/L 91 மீட்டல் பிரிவு 2 Day Classes

**ஆரம்பம்: 08-04-1991** (காலை 8-00 மணி)

| | | |
|---|---|---|
| பொருளியல் | : | திரு. கலாகரன் |
| வர்த்தகம் | : | திரு. இரட்ணம் |
| கணக்கியல் | : | திரு. S. K. பிரபாகரன் |
| அளவையியல் | : | திருமதி மதி |

மற்றும் அனைத்து பாடங்களும்.

மு. குறிப்பு: எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர்களினால் ஒருங்கிணைந்து போதிக்கப்படுகின்றது.

(B-2308)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## மருத்துவ பீடம்

### பரீட்சைகள் ஆரம்பமாகும் திகதிகள்

இப்பரீட்சைகள் கீழ் குறிப்பிட்ட திகதிகளில் நடைபெற உள்ளன.

1. மருத்துவ பீடம் மூன்றாம் ஆண்டு (பகுதி1: பகுதி 11) மீள்பரீட்சை 13 வைகாசி 1991
2. மருத்துவ பீடம் இரண்டாம் ஆண்டு பரீட்சை (1988 அனுமதி) - 3யூன் 1991
3. மருத்துவ பீடம் (பகுதி 1) பரீட்சை (1985 அனுமதி) - 1 யூலை 1991

(1), (2) ற்கான முடிவுத் திகதிகள் 22 04. 91ம் (3) ற்கான முடிவுத் திகதிகள் 10. 06. 91.

இக்குறிப்பிட்ட திகதிகளுக்குப் பின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

-பதிவாளர்

B 2334

## நினைவு கூருகின்றோம்

### 1991 - 04 - 07

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் கனகராயன் குளத்தின் சிறிலங்கா இராணுவத்தினரின் சுற்றி வளைப்பின்போது சயனைட் அருந்தி வீரமரணமடைந்த

**2 ஆம் லெப். அசோக்** (சரவணமுத்து வன்னிட்சிங்கம் - வவுனியா)

1986ஆம் ஆண்டு நொச்சிமுனையில் சிறிலங்கா அதிரடிப் படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்தினால் வீரமரணமடைந்த

**குட்டி** (தம்பிப்பிள்ளை சருணாகரன் - நொச்சிமுனை)

1988ஆம் ஆண்டு கண்ணீரூற்றில் பதுங்கியிருந்து தாக்கியதில் காயமடைந்து சயனைட் அருந்தி வீரமரணமடைந்த

**லெப். கமல்** (சந்தைபா கமலேஸ்வரன் - பழம் பாசி, நெடுங்கேணி)

இதே சம்பவத்தில் வீரமரணமடைந்த

**2ஆம் லெப். ராகவன்** (ஸ்ரீக்குமார் - கருவேப்பங்கேணி)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

- விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(B/2326)

## சாயி அக்குபங்சர் சிகிச்சை நிலையம்

- ★ வாதம்
- ★ ஆஸ்த்மா
- ★ மூட்டுக்காய்ச்சல்
- ★ நீண்டநாள் மனநோய்கள்

மற்றும்

மாற்றமுடியாது எனக் கணிக்கப்பட்ட நீண்டநாட்கள் கொண்ட எந்த வகையான நோய்களாக இருந்தாலும்

"வர்மானிய அலகு முறைச் சிகிச்சை"

எனப்படும் தமிழ் அக்குபங்சர் சிகிச்சை மூலம் சிகிச்சையளிக்கப்படும்.

**வைத்திய கலாநிதி V. P. சுந்தரராஜன்**

(விசேட அக்குபங்சர் சிகிச்சை நிபுணர்)

இல: 10 பருத்தித்துறை வீதி, நல்லூர்.

குறிப்பு: முழுக்க முழுக்க தமிழ் முறையிலும், அதி நவீன முறையிலும் சிகிச்சை அளிக்கப்படும். (B 2129)

அதி உன்னத சத்துணவு

## ஜீவாகாரம்

- ★ வளர்ந்து வரும் குழந்தைகளுக்கும்
- ★ கர்ப்ப தாய்மார்களுக்கும்
- ★ பாலூட்டும் தாய்மார்களுக்கும்
- ★ போஷாக்கு குறைவான குழந்தைகளுக்கும்
- ★ ஏனைய யாவருக்கும் சிறந்த சத்துணவு

★ இது முன் கூட்டியே தயாரிக்கப்பட்ட ஓர் உப உணவாகும் ★

கிடைக்குமிடம்: **அண்ணா கோப்பி கடை**

நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

(B- 2315)

**❀ சிந்தனைக்கு ❀**

அனுபவத்தை விவேகத்துடன் பயன்படுத்திக்கொண்டால் எதுவுமே வீணானதல்ல
— ஃபிரான்ஸுவொ டெனே ரெஜதன்

ஈழநாதம்

61, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 07-04-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05

# அனுபவம் தந்த பாடம்?

"வடக்கு கிழக்கு மாகாணங்களில் நடைபெறும் சண்டைக்கு விரைவில் முற்றுப்புள்ளி வைக்கப்படும். யுத்தத்தின் மூலம், இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிட முடியாது'' என புத்தளத்தில் நடந்த கூட்டமொன்றில் பேசுகையில் சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

இது சிறிலங்கா ஜனாதிபதிக்கு அனுபவம் கற்றுக் கொடுத்த பாடமா? அல்லது அரசியல்வாதிகளின் வழமையான பல்லவியா எனத் திட்டவட்டமாகக் கூற முடியாது உள்ளது. ஆனால், இரண்டிற்குமான சந்தர்ப்பங்களும், தேவைகளும் சிறிலங்கா ஜனாதிபதிக்கு உண்டு.

கடந்த வருடம் ஜூன் மாதம் விடுதலைப் புலிகளுக்கும் - சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் மோதல் ஆரம்பித்ததில் இருந்து சிறிலங்கா இராணுவம் பெருமைப்படக்கூடிய வெற்றி எதையும் அடையவில்லை. ஆனால் பெரும் இழப்புக்களைச் சந்தித்துள்ளதோடு, பெருமளவு அப்பாவி மக்களையும் கொன்று குவித்துள்ளது.

கிழக்கிலங்கையில் இராணுவம் வெற்றிபெற்றதாகக் கூறிக்கொண்ட போதிலும் புலிகளை அப்பகுதியில் இருந்து விரட்டிவிட முடியாமல் பெரும் நெருக்கடியில் உள்ளதாகச் செய்திகள் குறிப்பிடுகின்றன. கிழக்கில் பிரதானவீதிகளை மட்டுமே இராணுவம் தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாகவும், அதனையும் இரவுவேளையில் இராணுவம் இழந்து விடுவதாகவும் பலர் தெரிவிக்கின்றனர். இது தொடர்பாக இரு வாரங்களின்முன் சிறிலங்கா பாராளுமன்ற எதிர்க்கட்சி எம்.பி ஒருவரும் பாராளுமன்றத்தில் பிரஸ்தாபித்தார்.

வடக்கிலோ நிலைமை மேலும் மோசமானது. சிறிலங்கா இராணுவத்தினர் புலிகளை வடக்கில் ஒழித்துக்கட்டப் போவதாகக் கூறிய நிலை மாறி, தமது நிலைகளைப் பெரும் பிரயத்தனத்தின் மத்தியில் பாதுகாக்க வேண்டியுள்ளது. மேலும் முகாமை விட்டு வெளிச் செல்லக் கூடிய ஒதுக்கு புறங்களில் உள்ள முகாம்களில் இருந்து வெளிச் செல்லும் இராணுவத்தினர் எவ்வளவு இழப்புக்களுடன் திரும்புவர் என நிச்சயிக்க முடியாத நிலையும் உள்ளது. புலிகளால் ஒப்படைக்கப்படும் இராணுவத்தினரின் சடலங்களின் அடிப்படையில் இராணுவத்தினரின் இழப்புப் பற்றி அறிவிக்க வேண்டிய நிலையே உள்ளது.

அத்தோடு வடக்கில் தமது முகாம்களைப் பாதுகாப்பதற்கு முற்றுமுழுதாக விமானப்படையினரையே நம்பியிருக்க வேண்டிய நிலையில் இராணுவம் உள்ளது. கிழக்கிலும் புலிகளின் திடீர்த் தாக்குதலில் இருந்து மீண்டு வருவதற்கு விமானப்படையினரின் உதவியே இராணுவத்தினருக்குத் தேவையாக உள்ளது.

மேலும் போர் ஆரம்பித்த கடந்த ஜூன் மாதத்தில் இருந்து தனது பாதுகாப்பு அமைச்சர், பிராந்திய இராணுவத் தளபதி, பிரதிப் பொலிஸ்மா அதிபர் உட்பட ஆயிரத்திற்கு மேற்பட்ட இராணுவத்தினரையும் சிறிலங்கா இழந்துள்ளது.

இந்நிலையில், இராணுவ வெற்றி என்பது எட்டப்படமுடியாத ஒன்று என்பதை சிறிலங்கா அரசாங்கமும் அதன் தலைவர் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவும் உணர்ந்திருந்தால் அது ஆச்சரியப்படக்கூடியவிடயமல்ல. அத்தோடு ஜனவரி மாதம் புலிகள் அறிவித்த யுத்த நிறுத்தம் புலிகளின் பலவீனத்தால் அறிவிக்கப்பட்டதல்ல பலத்தின் அடிப்படையில் அறிவிக்கப்பட்டது என்பதும் புரிந்து கொள்ளப்பட்டிருக்கும்.

வரலாறுகள் கற்பது ஒரு நிகழ்வைத் தெரிந்து கொள்வதற்காக மட்டுமல்ல அச்சம்பவத்தில் இருந்து படிப்பினையைப் பெறுவதற்காகவும்தான். ஆனால் வரலாற்றின் மூலம் படிப்பினையைப் பெற்று அதற்கேற்பநடப்பவர்கள் புத்திசாலிகள். அனுபவத்தின் ஊடாக மட்டும் படிப்பினையைப் பெறக்கூடியவர்கள் புத்திசாலிகள் அல்ல.

சிறிலங்கா ஜனாதிபதிக்கு அனுபவம் மட்டுமே போதும் எனக் கருதலாம். அவ்வாறில்லை மேலும் பெற்றுத்தான் ஆகவேண்டும் என்றால் யார் தடுக்க முடியும்?

# வன்னி புலிகளின் பாசறை; ராணுவம் நிலைத்திட முடியாது

## பி.பி.ஸி. செய்தியாளர் விமர்சனம்

இலங்கையின் ஓயாத போரின் களம் இப்போது வடக்கிலுள்ள வன்னிக்காடுகளுக்கு சென்றுள்ளது. வன்னிப் பகுதியில் தென்னைமரவாடி விழுந்ததோடு இப்போது புலிகளின் வசம் தான் உள்ளது. இரண்டு வாரங்களுக்கு முன்பு மன்னார் பகுதியில் கடற்கரைக்கு சமீபமாக இருந்த இரு இராணுவ முகாம்களை விடுதலை புலிகள் கடுமையாகத் தாக்கினர். இது புரிந்துகொள்ளக் கூடியதே. புலிகளுக்கு ஆயுதங்களும் எரிபொருள் மற்றும் எண்ணெய்களும் தென்னிந்தியாவில் இருந்து தான் வரவேண்டும். எனவே அந்தப் பகுதியை தம் வசம் வைத்திருக்க புலிகள் கடுமையாகப் போரிடுகின்றனர். இது புரிந்துகொள்ளக் கூடியது தான. வன்னியில் இலங்கை இராணுவம் குறி வைத்துச் செயல்படுவதற்கு படுதோல்வியை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னாவின் திட்டம் தான் காரணம். வன்னியைப் பிடித்து விட்டால் மௌனியைப் பிடித்தது போலத்தான் யாழ்ப்பாணம் மட்டுமே புலிகளுக்கு மிஞ்சும் என்பது அவர் கணக்கு. ஆனால் உண்மை நிலைவரம் என்னவென்றால் மிஞ்சி மிஞ்சிப் போனால் இலங்கை இராணுவம் இப் பகுதியில் சில முக்கியமான சாலைகளை மட்டுமே தமது கட்டுப்பாட்டினுள் கொண்டு வரலாம். அவ்வளவும் தான் முடியும். என்றாலும் வன்னிப் பகுதியையே தாம் பிடித்து விட்டதுபோல மார்பு தட்டிக் கொள்ளலாம். வன்னிப்பகுதி காட்டுப்பகுதி இது புலிகளின் பாசறை இது போன்ற நிலப்பரப்பில் போரிட்டு நிலைத்திருக்க இலங்கை இராணுவத்திற்கு பின்பலமும் இல்லை. ஆட்பலமும் இல்லை. எனவே இங்கு அவர்கள் அடிவாங்கினால் ஆச்சரியப்படுவதற்கில்லை. இலங்கையின் கிழக்குப் பகுதியிலும் அரசின்பிடி உறுதியானதாக இல்லை. இராணுவம் சாலைகளை தனது கட்டுப் பாட்டில் வைத்துள்ளது அதுவும் பகல் வேளைகளில் தான். அடித்துப் போட்டு விட்டு அடர்ந்த இடத்திற்கு ஓடிப் போய்விடு என்ற புலிகளின் யுக்தி இங்கு நல்ல பலனை அளித்துள்ளது இந்தப் புலத்தின் தன்மை புலிகளுக்கே நன்மை. நிலைமை இப்படியிருக்கையில் இராணுவம் ஏதாவது வெற்றி காண ஏன் இப்படி அவசரப்படுகிறது?

மற்றொரு முக்கிய காரணம் இருப்பதாகப் பேசப்படுகிறது. கடந்த ஜனவரி மாதத்தில் உருவான போர் நிறுத்த ஒப்பந்தம் நிலைக்காமல் போனபிறகு அதிபர் பிரேமதாசா போர் முனையில் ஏதாவது குறிப்பிடத்தக்க வெற்றியை ஜூன் மாதத்திற்குள் காட்டுக. அப்போதுதான் நீங்கள் சொல்வதை ஏற்க முடியும் என்பதுபோல இராணுவத்திற்கு காலக்கெடு வைத்து விட்டாராம். அதிபர் இப்போது அமைதியையே விரும்புகிறார் அவருக்கு அது தேவைப்படுகிறது. அதே நேரத்தில் தமிழ் மக்களின் முறையீட்டை பரிவுடன் பரிசீலிப்பதற்கான அறிகுறி எதுவும் காணப்படவில்லை. எல்லாத் தமிழ் போராளிக்குழுக்களும் ஒத்த குரலில் கேட்பது இவைதான்.

1. வடக்கு, கிழக்கு மாகாண இணைப்பு.
2. தமிழர் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றம் நிறுத்தப்பட வேண்டும்.
3. தன்னாட்சி உரிமை வழங்கப்பட வேண்டும்.

அதிபர் பிரேமதாசா இவைகளுக்கு ஒத்துக் கொள்ளும் முடிவு தேவை என்று சொன்னாலும் அந்த வகையில் சுமுகநிலை தோன்றவும், போர் நிற்கவும் தேவையான எந்த அரசியல் நடவடிக்கையையும் தைரியமாக முன்மொழியவில்லை இதுவரை. எனவே வரும் மாதங்களும் போர் தொடரவே செய்யும். இராணுவத்தளபதிகள் புலிகளை ஒழித்தேயாக வேண்டும் என்று முழங்கிக் கொண்டிருப்பர். புலிகள் இராணுவத்தை அடித்து நொறுக்குவோம் என்று செயற்பட்டுக் கொண்டிருப்பர். இதில் இழுபறி நிலையே நீடிக்கும். எவருக்கும் முடிவான வெற்றி கிடைக்கப் போவதில்லை. இலங்கை இராணுவத் தளபதிகளைப் பற்றி ஒரு வார்த்தை. கடந்த எட்டு ஆண்டு காலமாக இவர்கள் புலிகளை ஒடுக்குவோம். ஒழிப்போம் என்று முழங்கிக் கொண்டே இருக்கின்றனர். ஆனால் நடப்பது என்னவென்றால் பணம் விரயமாகிறது. உயிர்கள் வீணாக மடிகின்றன.

> உண்மை நிலைவரம் என்னவென்றால் மிஞ்சி மிஞ்சிப் போனால் இலங்கை இராணுவம் இவ் வன்னிப்பகுதியில் சில முக்கியமான சாலைகளை மட்டுமே தமது கட்டுப்பாட்டினுள் கொண்டு வரலாம் அவ்வளவு தான் முடியும் என்றாலும் வன்னிப் பகுதியையே தாம் பிடித்து விட்டது போல மார்பு தட்டிக்கொள்ளலாம் வன்னிப் பகுதி காட்டுப்பகுதி. இது புலிகளின் பாசறை. இதுபோன்ற நிலப்பரப்பில் போரிட்டு நிலைத்திருக்க இலங்கை இராணுவத்திற்கு பின்பலமும் இல்லை. ஆட்பலமும் இல்லை.

# ச. ச. நிலைய நன்கொடையை 15க்கு முன் பெற்றுக் கொள்ளவும்

(கொழும்புத்துறை)

சனசமூக நிலையங்களிற்கு 1989, 1990 ஆம் ஆண்டுகளுக்கான நன்கொடைப் பணம் சம்பந்தப்பட்ட சகல உள்ளூராட்சி மன்றங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. இந் நன்கொடையை 1989ஆம் ஆண்டுவரை எவ்வித கணக்கு வேலைகளும் பரிசீலனை செய்யாது கொடுக்கும்படி பணிக்கப்பட்டுள்ளது.

1990 ஆம் ஆண்டுக்கான நன்கொடை சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் சிபாரிசின்படி கொடுக்கும்படி பணிக்கப்பட்டுள்ளது. சனசமூக நிலையங்கள் தங்களுடைய நன்கொடைப் பணத்தை உடனடியாகப் பெற்றுக் கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர். மே மாதம் 15ஆம் திகதிக்குப் பின்னர் இந்நன்கொடைப் பணம் எதுவும் வழங்கப்படமாட்டாது என பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அறிவித்திருக்கின்றார். (24)

# 27 பேருக்கு நியமனம்

(யாழ்ப்பாணம்)

பல வருடங்களில் ஏற்றுப் போன பணியாளர் வெற்றிடங்களை மீண்டும் நிரப்பும் பொருட்டு விரைவில் யாழ். பல்கலைக்கழகத்தில் இருபத்தி ஏழு விண்ணப்பதாரிகளுக்கு வேலை வழங்கப்பட உள்ளது என பல்கலைக்கழக பதிவாளர் கே. பரமேஸ்வரன் கூறியுள்ளார்.

இதன்படி வழங்கப்படவுள்ள நியமனங்களின் விபரம் வருமாறு: லிகிதர்கள் எட்டுப் பேர், நூலக உதவியாளர் ஒருவர், தொழில் நுட்ப உதவியாளர் நால்வர், கருவி செலுத்துனர் மூவர், ஆய்வுகூட கவனிப்பாளர் மூவர், புத்தகம் கட்டுபவர் ஒருவர், பாதுகாப்பு உத்தியோகஸ்தர் ஏழுபேர் என எல்லாமாக 27 பேர் நியமனமாக உள்ளதாக அவர் தெரிவித்தார். (லோ)

# நோயாளரிடம் லஞ்சம் பெறும் வைத்தியசாலை சிற்றூழியர்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா மருத்துவமனையில் சிற்றூழியர்கள் சிலர் நோயாளர்களிடமிருந்து லஞ்சம் பெறுவதாக நோயாளர் பலர் கவலை தெரிவித்துள்ளனர்.

வைத்தியசாலையின் வெளிநோயாளர் பகுதியில் இருந்து வார்ட்டுகளுக்கு நோயாளர்களை வண்டிகளில் தள்ளிச் செல்லும் சிற்றூழியர்கள் அவர்களிடம் இருந்து வற்புறுத்தி பணம் பெற்றுக் கொள்கின்றனர். மேலும் கடந்த வாரம் பிரசவவார்ட்டில் இருந்து நோயாளி ஒருவர் வெளியேறும்போது வண்டி தள்ளுபவர் தனக்கு பணம் தரும்படி மிரட்டவே அந்த நோயாளி சிரமத்தின் மத்தியில் நடந்தே வெளியேறி வந்ததாக கவலையுடன் தெரிவித்தார். (க)

# கடன் செலுத்த நிதி ஒதுக்கீடு

வெளிநாடுகளில் இருந்து இலங்கை பெற்ற கடன் தொகையில் 1000 கோடிரூபாவை கடந்த வருடம் அரசாங்கம் திருப்பிச் செலுத்தியுள்ளது என்று நிதி அமைச்சின் அதிகாரிஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒவ்வொரு வருடமும் சமர்ப்பிக்கப்படும் வரவு செலவுத் திட்டத்தில் வெளிநாட்டுக் கடன்களைச் செலுத்த நிதி ஒதுக்கப்படுகிறது என்றும் 1992ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டவேலை இப்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இதேநேரம் இந்த ஆண்டும் இதேயளவு தொகை திருப்பிச் செலுத்த எதிர்பார்க்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

